அன்பார்ந்த [பெயர்] [அடையாள அட்டை எண் / ஃபின் எண்],

நீங்கள் ஒரு கொரோனா தொற்றுநோய் 2019 (கொவிட்-19) சம்பவம் என்று மருத்துவச் சேவை இயக்குநரால் தீர்மானிக்கப்பட்டுள்ளீர்கள்.

தொற்றுநோய்கள் சட்டம், பிரிவு 15 (1) - இன் கீழ் தனிமைப்படுத்தும் உத்தரவு (IO) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. IO - வின் கீழ், நீங்கள் [தொடங்கும் தேதி] முதல் [முடிவடையும் தேதி] (தனிமைப்படுத்தும் காலம்) வரை [தனிமைப்படுத்தப்படும் முகவரியைக் குறிப்பிடுக] (தனிமைப்படுத்தப்படும் இடத்தில்) தடுத்து வைக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

நீங்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்படும் இடத்திற்குக் கட்டாயமாகச் செல்ல வேண்டும். தனிமைப்படுத்தப்படும் காலத்தில் எந்த நேரத்திலும் நீங்கள் தனிமைப்படுத்தப்படும் இடத்தை விட்டு வெளியேறக்கூடாது.

நீங்கள் IO - விற்கு இணங்கி நடக்கத் தவறினால், தொற்றுநோய்கள் சட்டம், பிரிவு 15 (4) - இன் கீழ் குற்றம் புரிந்தவராகக் கருதப்பட்டு, உங்களுக்கு எதிராக கடுமையான அமலாக்க நடவடிக்கை எடுக்கப்படும். முதலாவது குற்றத்திற்காக S$10,000 வரை அபராதம் மற்றும் / அல்லது 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

மேலும், தொற்றுநோய்கள் சட்டம், பிரிவு 55(1)(f) - இன் கீழ் உங்கள் இரத்தம் அல்லது உடல் மாதிரி பரிசோதனைக்காகப் பெறப்படுவதற்கு நீங்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக வேண்டும். தனிமைப்படுத்தப்படும் காலத்தின்போது தேவை ஏற்பட்டால், தனிமைப்படுத்தப்படும் இடத்தில் நீங்கள் சிகிச்சை பெற வேண்டும். மருத்துவப் பரிசோதனைக்கான விவரங்கள் பின்னர் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்த நிபந்தனைக்கு நீங்கள் இணங்கி நடக்கவில்லை எனில், தொற்றுநோய்கள் சட்டம், பிரிவு 55 (8) - இன் கீழ் குற்றம் புரிந்தவர் என்று கருதப்படுவீர்கள். முதலாவது குற்றத்திற்காக S$10,000 வரை அபராதம் மற்றும் / அல்லது 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.